றிக்கோ கோப்பியை
அரைத்து
பெற்றுக்கொள்ளவும்
நூடில்ஸ் வகைகளை
ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளவும்
றிக்கோ
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஐஸ்கிறீம் வகைகள்
பாலுடா சர்பத்
பொப்பே கவிறீஸ்
கோழி புரியாணிக்கும்
றிக்கோ
சுவீற்ஸ் அன் கிறீம்
ஹவுஸ்
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்! 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 24 சனிக்கிழமை 07 (5 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 160

# மட்டக்களப்பு, திருமலையில் ராணுவ அட்டூழியம் மீண்டும் தீவிரமாகிறது

## பொதுமக்கள் காரணமின்றி சுட்டுக் கொல்லப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், மே 7

மட்டக்களப்பு. திருகோணமலை மாவட்டங்களில் இராணுவத்தினர் தமது அட்டூழியங்களை மீண்டும் மிகப் பெரிய அளவில் தீவிரமாக்கி உள்ளனர்.

பொதுமக்களைக் காரணமின்றிச் சுட்டுக்கொல்வதும், சுற்றிவளைப்பு தேடுதல்களை நடத்தி மக்களைக் கைது செய்து; சித்திரவதை புரிவதும் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன.

இராணுவ அடக்குமுறையின் கொடூரம் இரு மாவட்டங்களிலும் கோரத் தாண்டவமாடுகிறது. தமிழ் மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது.

கடந்த வாரம் மட்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு வேறு பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் நான்கு தமிழ்மக்களைச் சுட்டுக் கொன்றனர்.

கடந்த மாதம் 29ஆம் திகதி வாகரையாற்றில் மீன் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களை படையினர் பதுங்கி இருந்து சுட்டுக் கொன்றனர்.

வாகரையைச் சேர்ந்த 5பிள்ளைகளின் தந்தையான 45 வயது ஆறுமுகம், 7 பிள்ளைகளின் தந்தையான 47 வயது அழகையா ஆகியோர கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி காஞ்சிரங்குடா, குரும்பையடி என்னுமிடத்தில் வைத்து 2 தமிழ் இளைஞர்களை அதிரடிப் படையினர் சுட்டுக்கொன்றனர். மட்டக்களப்பைச் சேர்ந்த 21 வயதான பெருமாள், அம்பாறையைச் சேர்ந்த 22 வயதான பஞ்சானந்த மூர்த்தி ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்ற பின்னர் படையின் இவை போன்ற கொலைகளை அடிக்கடி நடத்தி வருகின்றனர்:

நினைத்த நினைத்த மாதிரி சுற்றிவளைப்பு, தேடுதல்களை பகலிலும் இரவிலும் நடத்தி இளைஞர் யுவதிகளைக் கைது செய்து இரகசிய இடங்களில் வைத்து மிகப் பயங்கரமான முறையில் சித்திரவதை செய்கிறார்கள்.

அத்தோடு வீதியால் செல்வோரையும், சோதனை என்ற பெயரில் வீடுகளுக்குச் செல்லும் மக்களைத் தாக்குகின்றார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை மூன்று தமிழ்க்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் கூரே இல்லை

கொழும்பு, மே 7

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அரசாங்க நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் சிறிசேன கூரே கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் - திரு. கூரே தாம் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவிக்கும் கடிதத்தின் பிரதிகளும், தமக்கு ஒத்துழைப்புத் தந்ததற்கு நன்றி தெரிவிக்கும் கடிதங்களும், குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட எம். பிக்களுக்கு வழங்கப்பட்டன.

இன்னொரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டியிருக்கும் காரணத்தினால் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டதென்று திரு. கூரே தெரிவித்தார்.

தமது உத்தியோக கடமைகளைச் செய்வதில் இருந்து சில தினங்கள் திரு. கூரே ஒதுங்கியிருப்பார் என்று, அவரது உதவியாளர்கள் தெரிவித்தனர். (இ-எ)

## கொள்ளுப்பிட்டி பொலீஸ் அருகில் சூட்டுச் சம்பவம்

### சிங்கள இளைஞர் காயமடைந்தார்

கொழும்பு, மே. 7

கொழும்பிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு வந்த இருவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த செவ்வாய் மாலை கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்கு அருகில் இச் சம்பவம் இடம் பெற்றது.

ஜானக என்ற இளைஞரே துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்தவராவார். (இ-த)

### மேதினக் கூட்டத்தில் சு. க எம்பியின்

## றிவோல்வர், ரவைகள் காணாமற் போய்விட்டன!

கொழும்பு, மே7

தாம் வைத்திருந்த 9 மி. மீ றிவோல்வரும் பதினைந்து பாவிக்கப்படாத ரவைகளும் காணாமற் போய் விட்டதாக பாத்தறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. மங்கள சமரவீரா கிருலப்பனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

மேதினமன்று கொழும்பில் நடைபெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதிக் கூட்டத்திற்தான் கலந்து கொண்ட போது தனது சட்டையில் றிவோல்வரையும் ரவைகளையும் வைத்திருந்ததாகவும்—

அச்சமயமே அவை காணாமற்போய். விட்டதாகவும் திரு. மங்கள சமரவீர பொலிஸில் தெரிவித்தார். (இ-எ)

## பூஸா முகாமை மூடுமாறு தென்மாகாணசபை கோரும்

விரவில, பூஸா ஆகிய இடங்களில் உள்ள தடுப்பு முகாம்களை மூடும்படியும் —

குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படாமல் அத் தடுப்பு முகாம்களில் வைக்கப் பட்டுள்ளோரை உடனடியாக விடுதலை செய்யும்படியும் மத்திய அரசாங்கத்தை தென் மாகாணசபை கோரும்.

தென்மாகாண சபையின் கொள்கை அறிக்கையில் இவ் விவரம் வெளியிடப் பட்டுள்ளது அடுத்தவாரம் மாகாண சபைக் கூட்டம் நடைபெறும் போது இக்கொள்கை அறிக்கை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அதேசமயம் தென் மாகாண சபை மாதப் பத்திரிகை ஒன்றை "ஒப்செட்" முறையில் வெளியிடவும் முடிவு செய்துள்ளது. (இ-எ)

## வேலை நிறுத்தத்தில் குதிக்க பல்கலை. ஊழியர் முடிவு

அனைத்து பல்கலைக்கழக ஊழியர் சம்மேளனத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் தமது கோரிக்கைகளை முன் வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். கல்வித்துறை சாராத ஊழியர்களே வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்.

10 சதவீத சம்பள உயர்வு, மருத்துவத் திட்டம், வீடு கட்ட கடன் வசதி ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே வேலை நிறுத்தம் நடைபெறும்.

இந்த தொழிற் சங்கத்தினர் கடந்த 28 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## அம்பாறைப் பகுதியில் இரு பொலீஸார் பலி

மணிலா, மே 7

அம்பாறை மாவட்டத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொலிஸார் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு பொலிஸ் சப். இன்ஸ்பெக்டரும் மற்றும் பொலிஸ் ஒருவருமாக இருவர் உயிரிழந்தனர். (இ-3)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 7

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## லேக்ஹவுஸ் தலைவராக சரத் அமுனுகம

கொழும்பு, மே 7

டாக்டர் சரத் அமுனுகம லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவராக நேற்றுப் பதவி ஏற்றார்.

தலைவராகப் பணியாற்றிய திரு. சுனில் ரொட்ரிகோ அண்மையில் ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (இ-எ)

## ஜனாதிபதி மாளிகை முன் சத்தியாக்கிரகம்

கொழும்பு, மே7

மே தினமான கடந்த முதலாம் திகதி கொழும்பில் ஜனாதிபதி மாளிகை முன் சத்தியாக்கிரகம் செய்த ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

தொழிற்சாலை உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்தே இவரின் சத்தியாக்கிரகம் இடம்பெற்றது. (இ-ச-6)

### முச்சந்தி முனி



கடைசியில் ஐ. தே. க. சாம்பாறும் கட்சி ... போய் முடியப் போகுது பாருங்கோ....

## தமிழீழ நீதிமன்றுக்கு நேற்று நாடாளுமன்றில் பாராட்டு!

விடுதலைப் புலிகளின் நீதிமன்றத்தில் வழக்கு இல்லை. வழக்குகளில் தாமதம் இல்லை" அந்த முறையை அரசாங்கம் முன் மாதிரியாகக் கொள்ளலாம்"

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாவட்ட எம். பி. ஸ்ரீகாந்தா நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட அரசாங்கக் கட்சி எம். பி. ஸ்ரீ நாத்குமாரசிங்க முன்வைத்த நீதி நிர்வாகம் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் தமிழீழ நீதிமன்றத்தைப்பாராட்டினார். (இ-ச)

## தேசியப் பட்டியல் எம்.பிக்களை பதவி துறக்குமாறு கோரிக்கை

### ஆனால் தொண்டா, அனுராவுக்கு விதிவிலக்கு

கொழும்பு, மே 7

தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவானோரை தமது பதவிகளை ராஜினாமாச்செய்யுமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கேட்டுள்ளார்.

ஆனால் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான எஸ். தொண்டமான், ஏ. ஆர். எம். மன்சூர், அநுரா பண்டாரநாயக்கா ஆகியோர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் —

ஏனையோர் தமது பதவியை ராஜினாமாச் செய்யும் பட்சத்தில் காமினி திஸநாயக்கா, குசுமன் சேனநாயக்கா, டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா ஆகியோரை நியமிக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என்றும் 'லங்காதீப' தெரிவித்துள்ளது. (இ-3-9)

## ஹேமா—சஜித்தை ஐ.தே. கவில் இணைப்பதற்கு நடவடிக்கை

### புதிய பொதுச் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு மே 7

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமா, புதல்வர் சஜித் ஆகியோரை ஐக்கியதேசியக் கட்சியில் இணைத்துக் கொள்ள தாம் நடவடிக்கை எடுக்கப் போவதாக கட்சியின் புதிய பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்திருக்கிறார்.

மறைந்த அத்துலத் முதலியினால் ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியையும் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஹேமா, மகன் சஜித் ஆகியோர் அரசியலில் உயர்முறையில் செயற்பட வாய்ப்புகளை உருவாக்கவிருப்பதாகவும் அவர் கூறினார்.

பிரேமதாஸா அரசு மீது அரசியல் குற்றப் பிரேரணையைக் கொண்டுவந்த காமினி திஸநாயக்காவை ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேர்த்துள்ள இன்றைய சூழ்நிலையில் ஹேமாவும் அவரது மகன் சஜித்தும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொள்வார்களா என்பது சந்தேகமே என்று பி.பி.ஸியின் சிங்கள செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார். [இ-ஏ-6]

## டாக்டர் காமினிவிஜேசேகரா புதிய பொதுச் செயலாளர்

கொழும்பு, மே 7

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக டாக்டர் காமினி விஜேசேகரா நேற்று பதவியேற்றார்.

ஸ்ரீகோட்டாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் பேசுகையில் நாட்டில் அப்பழுக்கற்ற அரசியலை நிலைநாட்டுவதே ஜனாதிபதியின் நோக்கம் என்று கூறினார்.

... பொதுச் செயலாளர் பதவியில் இருந்து சிறிசேன கூரே ராஜினாமாச் செய்திருந்தது தெரிந்ததே. (இ-எ)

## ஓமந்தையில் குண்டு வீச்சு

நேற்று முன்தினம் காலை வவுனியா மாவட்டம் ஓமந்தைப் பகுதியில் ஸ்ரீ லங்கா விமானப்படையின் போர் விமானம் ஒன்று குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தியது.

இதனால் வீடு ஒன்று முற்றாகச் சேதமுற்றது. பல பயன் தரு மரங்கள் நாசமாகின. (இ-எ)

## அகதிகளை பலவந்தமாக அனுப்பினால் போராட்டம்

### கோபாலசாமி எச்சரிக்கை

பணிலா, மே 7

இலங்கைத் தமிழ் அகதிகளை கட்டாயப்படுத்தி இலங்கைக்கு அனுப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுத்தால் தமது கட்சி மாபெரும் போராட்டத்தில் குதிக்கும் என்று வை. கோபாலசாமி எச்சரித்துள்ளார்.

இலங்கையில் நடக்கும் இனக் கொலைக்கு பயந்து தமிழகத்தில் வாழும் ஈழ அகதிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளனர் என்றும் —

அமைதியாக வாழும் நாள் திரும்பினால் அவர்களாகவே இலங்கை திரும்புவர் என்றும் — அவர் தெரிவித்தார்.

## வை. கோ. அணியின் பெயர் மறுமலர்ச்சி தி. மு. கழகம்

சென்னை, மே 7

திரு. வை. கோபாலசாமி தலைமையிலான தி. மு. க. அணி, தனது பெயரை மறுமலர்ச்சி தி.மு.க. என மாற்றியுள்ளது.

நேற்று நடந்த அக்கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தில் இலங்கையில் இயல்பு நிலை மீண்டும் ஏற்படும் வரை தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதை மத்திய அரசு நிறுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

எந்த ஒரு தீவிரவாதப் பிரிவையும் கட்சி ஆதரிக்காது என்று கூறும் இன்னொரு தீர்மானமும் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ-எ)

## அச்சுவேலி பகுதியில் ஹெலி தாக்குதல்

அச்சுவேலி, மே 7

நேற்றுக் காலை அச்சுவேலி, பத்தமேனி, தம்பாலைப் பகுதிகளை வட்டமிட்ட ஹெலி திடீரென கலிபர் தாக்குதலை நடத்தியது.

இதனால் நேற்று அச்சுவேலிப் பகுதி பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாக இருந்தது. (இ-11)

## மரணதண்டனை நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், மே 7

மந்துவில் மேற்கைச் சேர்ந்த பொறியியலாளர் சதாசிவம் செல்வகுமார் (வயது 42) கொலை தொடர்பாக குற்றவாளிகளாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட இருவருக்கும் நேற்று மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

நேற்றுக் காலை 5.00 மணி அளவில் கொடிகாமம் சந்திக்கு சமீபமாக பருத்தித்துறை வீதியில் வைத்து தண்டனை நிறைவேற்றப்பட்டது.

செல்லையா மயில்வாகனம், திருமேனி நேசராசா ஆகியோரே அந்த இருவரும் ஆவர். (இ-117)

## மாஹோவில் தபால்களை அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 7

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக்கொண்டிருக்கும் 'மாஹோ' கப்பல் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பு திரும்பும் போது தபால் பொதிகளை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளியூருக்கான தபால்களை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகபெட்டியில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (இ-3)

## கப்பம் கேட்ட ரெலோ உறுப்பினர் ஐவர் கைது!

சென்னை, மே 7

"ரெலோ" அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 5 இலங்கைத் தமிழர்கள் கடந்த சனிக்கிழமை தமிழக பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொருரிப் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த இலங்கை தமிழர் ஒருவரிடம் அவர்கள் 25 ஆயிரம் ரூபாயை கப்பமாக கேட்டனர் என்றும்—

வர்த்தகரிடம் அவ்வளவு பணம் உடனடியாக இல்லாமையால் அவருக்கு ஒரு வார அவகாசம் கொடுக்கப்பட்டதாகவும்—

ஒரு வாரத்தின் பின் பணம் பெற மேற்படி ஐவரும் சென்ற போது பதுங்கியிருந்த பொலிஸார் அவர்களைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பண்டம், வாத்தோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30719)

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 698/15, தனைபாழி, சபாபதி வீதி, யாழ்ப்பாணம். (30759)

### கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பூசி போட்ட இரண்டரை மாத Golden Comet சிவப்பு பேடுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30718)

### மணமகள் தேவை

38 வயது. விசாகம் 3ஆம் பாதம் 10இல் செவ்வாய் பாவக்கிரகம் 55, ஜேர்மனி விஸா வாழ். உள்ளவருக்கு அழகிய, படித்த பெண் தேவை. ப. பரராசசிங்கம், தொண்டாவில் றோட், கோப்பாய் தெற்கு. (30743)

### மணமக்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 29 வயது பிரான்ஸிலுள்ளவருக்கும், 31வயது டாக்டருக்கும், 32 வயது பட்டதாரி ஆசிரியருக்கும், 34 வயது பெண் டாக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (30766)

### மணமக்கள் தேவையா?

எதிர்பார்க்கும் தகுந்த மணமக்கள் இருக்கிறார்கள். நேரத்தை வீணாக்காமல் ஒத்துவரக்கூடிய குறிப்புகளையும் விபரங்களையும் திருப்தியுடன் எடுத்துச் செல்லலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (30765)

### ஆனந்தம் அம்மாமி

தரமான சுவையான அப்பளம் கிடைக்கவில்லையா? கவலையை விடுங்கள். உங்கள் உணவிற்கு மெருகூட்டுகிறது. சுத்தமான உழுந்து மாவில் தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் அம்மாமி அப்பளம் தனித்துவமான சுவை. எங்கும் தயாரிக்கப்பட்டது கிடைக்கும் இடங்கள் விக்னேஸ்வரா, விநாயகர், சின்னத்தம்பி சாவகச்சேரி. இராஜேஸ்வரி கொடிகாமம், அன்கரன், பளை, நீர்வேலி குகன், அம்பிகை யாழ்ப்பாணம். (7362)

### வரலாறு ஆண்டு-10

வினா-விடை குறிப்புகள் (4ஆம் பதிப்பு) கொழும்பில் இருந்து விற்பனைக்கு வந்துள்ளது. குறிப்பிட்டளவு பிரதிகள் விலை ரூபா 38/-, 40/- அல்ல. புத்தகசாலைகளில் பெறலாம். ஆக்கம்: N. Mylvaganam, B. A. (Modern History Special) (30760)

### சாரணியம்

வெளிவந்துவிட்டது சாரணியம். சாரணர்களுக்கும், சாரண தலைவர்களுக்குமான அரிய பல விடயங்களை உள்ளடக்கிய கையேடு - பாகம் 1 கிடைக்குமிடம் தமிழ்த்தாய் புத்தகசாலை, யாழ்ப்பாணம் அருள் எண்டர்பிரைஸ், கன்னாகம். (30753)

### ஜோதிடம்

உங்களுக்கு இராசயோகம் உண்டா? எப்போது பலன் செய்யும். விவாகம் எப்போது என்பதை சரியாக அறிய சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 758, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (30762)

### திருமணசேவை

உள்நாடு வெளிநாடு மணமகன், மணமகள் ஜாதகம் உள்ளவர்கள் தொடர்பு கொள்க "அபிராமி", துர்க்காதேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (30750)

### ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்ற ஆறு இயற்கைப் பொருள்கள் சேர்ந்த ஆனந்தம் சீயாக்காய் பவுடர். ஐந்து நிமிடம் வெந்நீரில் ஊறபோட்டால் சம்பூ போன்று செயல்பட்டு அழுக்கை அகற்றி கண்ணுக்கு குளிர்ச்சி அளிக்கிறது. கேட்டு வாங்குங்கள் ஆனந்தம். (7361)

---

JAFFNA TAMIL

I

PHONOLOGY AND MORPHOLOGY

BY

Prof. S Suseendirarajah

This work presents a descriptive grammar of Tamil Language as spoken in Jaffna. It is written according to the principles of modern synchronic linguistics

Prof. R. E. Asher of the University of Edinburgh, a renowned specialist in Tamil linguistics, says in his foreword; 'I am confident this first volume — will be seen as a major contribution to the field of Tamil linguistics'.

Price Rs. 175/-

For copies contact: Bursar

— REGISTRAR.

University of Jaffna, Jaffna.

[C-7996]

---

## SPOKEN ENGLISH BY BRITTO

புதிய பிரிவு

ஆரம்பம்;

07 - 05 - 1994

(1 மணி)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8077)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்

பிரிவு - 2

O/L

சனி, ஞாயிறு வகுப்புகள்

(8-00 — 2-00)

ஆரம்பம்:

07 - 05 - 1994

மாலை 2 மணி

★ தர இடத்து மாணவர்களின் நன்மை கருதி.

★ O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த போதனை.

(சி-8075)

---

## தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு லிஸ்டர் அல்லது யன்மார் என்ஜின் (15 H.P. இலிருந்து 30 H.P. வரை) தேவை. விலை விவரங்களுடன் அறிவிக்கவும்,

விளம்பர இல. 639.
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

(30770)

---

## பாடசாலை அனுமதி

நவீல்ட் செவிப்புலன் விழிப்புலனிழந்தோர் பாடசாலை

கைதடி

பாடசாலையில் சேரும் வயதெல்லைக்குட்பட்ட செவிப்புலன் / விழிப்புலனிழந்த ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர். கல்வி, தங்குமிடம், உணவு யாவும் இலவசம். (நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப்படும்) விண்ணப்பிக்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

— அதிபர்.

[சி-7964]

---

வெள்ளி விழா ஆண்டில்

## பொண்ட் (BOND) கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

07-05-1994 முதல்

A/L 96

சனி-ஞாயிறு

| | | |
|---|---|---|
| 10-00 | App. Maths | — திரு. முருகையா |
| 10 00 | Zoology | — திரு. ஞானேந்திரன் |
| 11-00 | Pure Maths | — திரு. முருகையா |
| 11-00 | Botany | — திரு. ஐங்கரநேசன் |
| 12 00 | Chemistry | — திரு. D. சிவசோதி |
| 1 00 | Physics | — திரு. ஜெயசீலன் |
| 2-00 | Pure Maths | — திரு. கணேசன் |
| 3-00 | App. Maths | — திரு. கணேசன் |

★ அனைத்து மாணவர்களாலும் போற்றி மதிக்கப்படும் - தரமான ஆசிரியர் குழு.

★ ஒவ்வொரு மாதத்திலும் - வாரம் ஒரு பாடம் பயிற்சிப் பரீட்சைகளுடனான வகுப்புகள்

(7367)

---

## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி

ஆவரங்கால் மத்திய வி. க.

வளர்ச்சி நிதிக்காக

ஆவரங்கால் மத்திய வி. க. நடத்தும்

மாட்டு வண்டிச் சவாரி

இன்று 07 – 05 – 1994 பிற்பகல் 2 மணிக்கு

ஆவரங்கால் சவாரி மைதானத்தில்

நடைபெறும்.

பிரவேசம் ரூபா. 10/-

போட்டியாளர்களின் கவனத்திற்கு இன்றைய போட்டியில் ஊசிப்படி பாவிப்பதற்கு சவாரிச் சங்கம் அனுமதி தந்துள்ளதையும் அறியத்தருகின்றோம்.

[30767] — ஆவரங்கால் மத்திய வி. க

---

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 96

தூய கணிதம்

பிரயோக கணிதம்

ஆரம்பம்: 10 - 05 - 1994

குறிப்பு: (I) நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்,

(II) மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் இன்று முதல் பதிவுசெய்து உங்கள் இடத்தை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

— நிர்வாகி

(சி-8028)

---

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

சாவகச்சேரி

## வாடகை லொறி பெறுவதற்கான கேள்விக் கூற்றுப் பெறல்

மேற்படி எமது சங்கத்தின் பின்வரும் இடங்களில் சேவை புரிவதற்கு விருப்புபவர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. விரும்புவோர் 16-05-94க்கு முன்னதாக நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் "பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

1. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
 — பருத்தித்துறை துறைமுகம்
2. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
 — யாழ். களஞ்சியம் யாழ்ப்பாணம்.
3. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
 — கோண்டாவில் களஞ்சியம்
4. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
 — கிளை நிலையங்கள்

குறிப்பு: சகல கிளை நிலையங்களும் சங்கத்தில் இருந்து 05 கிலோ மீற்றர் தூரம் வரையில் உள்ளன.

— பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

[சி-7999]

---

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

சாவகச்சேரி

## கேள்வி கூற்றுப் பெறல்

மேற்படி எமது சங்கத்தின் 24/3125 இலக்க இன்ரநஷனல் லொறியின் உடற்கோப்பு மீள புனரமைப்பு செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. விரும்புவோர் 16-05-1994க்கு முன்னதாக நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் "பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் 'உடற்கோப்பு மீள புனரமைத்தல்' என குறித்து அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:- லொறியினை காரியாலய வேளைகளில் பிரதம சங்கத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

03-05-1994.

(சி-8101)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 14 — 03 — 1939 | 24 — 03 — 1994 |

அமரர்

### இராமசாமி செல்வராஜா

(மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா)

உலகில் நீரும் வாழ்ந்த காலம் உயர்ந்த வாழ்வின் - பயணமே
சேர்ந்த உறவும் இணைந்த உள்ளமும் தொடர்ந்து - வாழும் சிறுமை
இந்த உலகில் ஒன்று சேர்ந்து வாழ்ந்த காலம் - கொஞ்சமே
எந்த நாளும் உந்தன் அன்பை வாழ்த்தும் எங்கள் - நெஞ்சமே
விழியிரண்டும் கண்ணீராய் வேதனையில் நாம் மிதக்க
நினைவுகளில் வாழவிட்டு நீர் எங்கு சென்றீரோ!

24-03-1994 இல் அகால மரணமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் விசேடமாக பலவித உதவிகள் புரிந்த வவுனியா தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களுக்கும், வவுனியா, கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் எங்கள் துயரத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்
அன்பு மனைவி, மக்கள்,
உறவினர்.

2, சுவாட்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(30749)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் வேலுப்பிள்ளை கருணாநிதி

(R. R. I. நிறுவனர் - கணக்காளர், C. I. M. A. விரிவுரையாளர்)

மலர்வு: 05 — 01 — 1946
உதிர்வு: 07 — 04 — 1994

சின்ன வயதிற் செயற்கரிய
செய்தாய், கொழும்பு மாநகரிற்
பென்னம் பெரிய நிறுவனத்தைப்
பேணிக் காத்துன் அறிவாலே,
மின்ன வைத்தாய் பலபேரை
மெச்சி நின்றோம், அப்பா நீ!
என்ன செய்தாய் எமையெல்லாம்
ஏங்க வைத்து நடந்திட்டாய்.

இன்று (07-05-1994) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

மனைவியும், பிள்ளைகளும்.

212, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[30768]

---

உ
சிவமயம்

## மாங்கல்ய தாரண விவாக அழைப்பு

அன்புடையீர்!

சுவஸ்திஸ்ரீ மங்களகரமான பவ வருடம் சித்திரைத் திங்கள் 25ஆம் நாள் 08 – 05 – 1994 ஞாயிற்றுக்கிழமையும் ரேவதி நட்சத்திரமும் கூடிய காலை 8 மணி 28 நிமிடம் தொடக்கம் 10 மணி 20 நிமிடம் வரையுமுள்ள மிதுன லக்கின சுபயோக நேரத்தில்

| | |
|---|---|
| சித்தங்கேணி சிவன்கோயிலடியைச் சேர்ந்த சோமசுந்தர ஐயர் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் **லெட்சுமிநாராயண சர்மா** அவர்களுக்கும் | சங்கானை சிவன் கோயில் ஆதீனத்தைச் சேர்ந்த தியாகராசக் குருக்கள் தம்பதிகளின் புதல்வி **சிவாஜினி** அவர்களுக்கும் |

மாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்து வைப்பதற்கு இறையருள் கைகூடி இருப்பதால், அத்தருணம் சங்கானை சிங்கப்பூர் வைரவர் கோயிலடியில் தற்போதுள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்களும், தங்கள் குடும்ப சகிதம் சமூகம் தந்து மணமக்களை வாழ்த்தி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் மணமகன் இல்லத்தில் அதிகாலை 5 மணி
வதூவர கிரகப் பிரவேசம் மாலை 5-30 மணி

தங்கள் நல்வரவை நாடும்;

ஏ. சோமசுந்தர ஐயர்,
சரஸ்வதி அம்மா,
சிவன்கோயிலடி,
சித்தங்கேணி.

கா. தியாகராசக் குருக்கள்,
புவனேஸ்வரி அம்மா,
சங்கானை கிழக்கு,
சங்கானை.

அவ்வண்ணமே தங்கள் நல்வரவை நாடும்:

எஸ். பாலசண்முகக் குருக்கள் தம்பதிகள்
ப. மனோகரக் குருக்கள் தம்பதிகள்
சு. சபேசன் தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
392/3, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## 'மக்களாட்சியின் மகிமையோ இது!

கொழும்பு பங்குச் சந்தையில், பங்குகளின் விலைகள், அவற்றின் பெறுமதி மேலும் வீழ்ச்சி கண்டு வருவதாக வர்த்தகத்துறை வட்டாரங்கள் மூலம் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற தென் மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமோக வெற்றியீட்டியதாக செய்திகள் கிடைத்த உடனும் கொழும்புப் பங்குச் சந்தையில் பங்கு விலைகள் கிடுகிடுவெனக் கீழே இறங்கின.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தால், இப்போது நடைமுறையில் உள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையை அது கைவிட்டுவிடும் என்ற கருத்து, முதலீட்டாளர்களின் மனதைக் கலக்கியதால், பங்கு விலைகள் வீழ்ந்தன என்று கூறப்பட்டது.

ஆனால் மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா முதலீட்டாளர்களையும், வர்த்தகர்களையும் அழைத்து, தமது கட்சி பதவிக்கு வந்தாலும் திறந்த பொருளாதாரக் கொள்கையே — ஒரு சில மாற்றங்களுடன் — தொடர்ந்து கடைப்பிடிக்கும் எனத் தெளிவுபடுத்தியிருந்தார்.

அவர் அவ்வாறு வாக்குறுதி அளித்திருப்பினும், எதிரணியின் பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்த பின்னர் தான் உண்மையான வடிவம் தெரியும் என்பதால், வர்த்தகர்களிடை முதலீட்டாளர்களின் முழுப் பயமும் நீங்கிவிடவில்லை.

எனினும் ஏப்ரல் மாதத்தில் ஓரளவேனும் திருப்திகரமாக இருந்த பங்குச் சந்தை மீண்டும் சரிவதற்கு ஆளுங்கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலையே, ஸ்திரமற்ற தளம்பல் நிலையே காரணம் என்று பொருளியல் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

அது ஒருபுறமிருக்க — நாட்டில் பணவீக்கம் விரைவில் 20 சதவீதத்துக்கு உயரும் ஆபத்தும் தோன்றியிருக்கிறது. தேர்தலில் வாக்குத் தேடும் நோக்கத்தோடு மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கெனக் கூறி, ஜனாதிபதி விஜேதுங்கா மே நாளன்று பல நிவாரணத் திட்டங்களை அறிவித்தார். குறித்த நிவாரணங்களை வழங்குவதற்குப் பெரும் பணம் தேவைப்படும்.

இந்த ஆண்டு தேர்தல் ஆண்டு என்று அறிவித்ததால், ஜூன் மாதத்தில் நடைபெறவிருந்த இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டமும் இடம்பெறமாட்டாது. 1994ஆம் ஆண்டுக்குரிய தகுதி வாய்ந்த — பொருளாதார வளர்ச்சிக்கு உதவவல்ல — கொள்கைத் திட்டத்தை அரசினால் சமர்ப்பிக்க முடியாதிருக்கிறது. அதனாலேயே இவ்வருடத்திய உதவும் நாடுகளின் கூட்டம் ரத்தாகியது.

இத்தகைய பொருளாதார மந்தமான, அதமமான சூழ்நிலையில் நாட்டின் உற்பத்தி, வர்த்தகத்துறைகள் பெருமளவில் பாதிப்புறும். அது மட்டுமன்றி பணவீக்கம் சுற்றி வந்து மக்கள் கழுத்தையே வளைத்துப் பிடித்துச் சுருக்கிட்டு நெருடும்!

இந்தக் கட்டத்திலாவது, வடக்கு - கிழக்கில் போரை நிறுத்தி, அதற்கு ஆண்டொன்றுக்குச் செலவாகும் 2,500 கோடி ரூபாவை பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்துவதற்கு மீளெடுக்கும் நோக்கம் அரசுக்கு இருப்பதாகத் தென்படவில்லை!

பங்குச் சந்தைப் பாதிப்பு, பணவீக்கத் தாக்கம் என்பன இவ்வருடத்தில் உடனடியாகப் பெரிதாக வெளியே தெரியாவிடினும், 1995இல் பொருளாதார நிலைமை மேலும் மோசமடைந்து மக்களின் வாழ்க்கை நிலையை படுபாதாளத்தில் தள்ளும் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்!

அரசியல்வாதிகளுக்கு மக்களைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கையைக் குறித்தும் என்ன அக்கறை! தமது பதவிகளையும், சுகபோகங்களையும் எவ்வாறாயினும், எப்பாடுபட்டும் தக்க வைத்துக் கொண்டால் போதும் அவர்களுக்கு! அட, ஜனநாயகமே — மக்கள் ஆட்சியே — உனது மகிமையே இதுதானோ?!

இனப்பிரச்சினை விடயத்தில்

# டி. பியின் நிலைப்பாடு பற்றி மேற்கு நாடுகள் அதிருப்தி

கொழும்பு, மே 7

ஜனாதிபதி விஜேதுங்காவின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாடு குறித்து பல முக்கிய மேற்கு நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நாடுகளின் கொழும்புத் தூதரகங்கள் மூலம் அதிருப்தி தெரிவிக்கப்பட்டிருப்பதாக "த ஐலண்ட்" நாளிதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

வடக்கு – கிழக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை என்றும் இராணுவ ரீதியில் தான் இதற்கு முடிவு காண வேண்டும் என்றும் ஜனாதிபதி தொடர்ந்து கூறிவருவதே மேற்கு நாட்டுராஜதந்திரிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ஒ-எ)

## செயற்குழு கூட்டத்தில் கூரே பங்குபற்ற முடியாத நிலை

கொழும்பு, மே 7

விரைவில் நடக்கவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் சிறிசேன கூரே கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்ததுடன் தமது செயற்குழு உறுப்பினர் பதவியும் தானாகவே காலாவதியாகி விட்டதாகவும் திரு. கூரே கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார். (ஒ-எ)

## புலிகளின் குரல் வானொலியில்

07 – 05 – 1994
சனி இரவு
★ 8-01 — அறிவியல் கலசம்
★ 8-10 — தாயகப் பாடல்கள்
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம் "வீரம் விளையும் நிலம்"

08 – 05 – 1994
ஞாயிறு காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தொடர்ந்து— களத்தில் மலர்ந்தவை

# 4 அமைச்சர்களின் பதவிகள் பறிபோகும்

கொழும்பு மே 7

ஆளும் கட்சியால் இன்னும் ஒரு சில தினங்களுக்குள் செய்யப்பட உள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது உயர் மட்ட அமைச்சர்கள் நால்வரின் பதவிகள் பறிக்கப்பட உள்ளன.

இவ்வாறு ஐ. தே. கவின் செயற்குழு தீர்மானித்துள்ளதாக "லங்கா தீப" நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

இந்த 4 அமைச்சர்களும் ஐ. தே. க தலைவர்களுக்கு எதிராக துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற காரணத்தினாலே பதவி பறிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

இதேவேளை தேசிய பட்டியல் மூலம் எம். பியாக நியமிக்கப்பட்ட பலரை உடனடியாக ராஜினாமாச் செய்யும்படி ஜனாதிபதி தனது ஆதரவாளர்கள் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இவ்வாறு 'லங்கா தீப' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-9)

## மாணவர் சீருடைத் துணி சீனாவிலிருந்து வந்தது!

கொழும்பு மே 7

பாடசாலை மாணவருக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் சீனாவில் கொள்வனவு செய்யப்பட்ட துணியில் முதலாவது தொகுதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இரண்டாவது தொகுதி துணியுடன் கப்பல் கொழும்புத் துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும்—

கடைசித் தொகுதி அடுத்த மாதம் வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கு அடுத்த மாதம் மூன்றாம் வாரத்தில் சீருடைத் துணிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

45 கோடி ரூபா செலவில் 42லட்சம் மாணவருக்கு 94லட்சம் மீற்றர் துணி சீருடைக்காக வழங்கப்படவுள்ளது. (த-எ)

## வன்னிப் பகுதி மாணவருக்கு தலைவரின் பரிசில்கள்

யாழ்ப்பாணம், மே 7

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் வெற்றியீட்டிய வன்னி முல்லை மற்றும் மன்னார் மாணவர்களுக்கான தமிழீழ தேசியத் தலைவரின் பரிசில்களும், கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பரிசில்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த வைபவத்தில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், வன்னி மாவட்ட தளபதி ருட்டி, கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் கமலநாதன் ஆகியோர் பரிசில்களை வழங்கினர். ஆறு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

முல்லை மாவட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வித்தியானந்தா பாடசாலையில் வைத்து செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன 10 மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் புளியங்குளம் இந்து கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன. [த-3]

நீண்ட காலமாக பணம் செலுத்தாது

## டிமிக்கி விடும் அமைச்சர்கள் மீது கடும் நடவடிக்கை

ஜனாதிபதி டி.பி. அறிவிப்பு

கொழும்பு, மே 7

அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தவேண்டிய பணத்தை நீண்ட காலமாகச் செலுத்தாது "டிமிக்கி" கொடுத்து வரும் அமைச்சர்களுக்கு எதிராக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்து இருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு வாரங்களுக்கு இடையில் இப் பணத்தை செலுத்தும்படி ஒரு சிரேஷ்ட அமைச்சர் ஒரு திட்ட அமைச்சர் மற்றும் இரண்டு முதலமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

அரச மரக் கூட்டுத்தாபனத்தில் இருந்து பலகைகள் வாங்கிய வகையில் சுமார் 5 லட்சம் ரூபா பணத்தை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் நான்கு முதல் ஏழு வருடங்களாக செலுத்தாது இருந்து வருகின்றனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இப் பணத்தை அறவிட கூட்டுத்தாபனம் எடுத்த முயற்சிகள் அனைத்தும் பலனளிக்காத நிலையில் விஷயம் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு எழுத்து மூலம் அனுப்பிய உத்தரவில், "இரு வாரங்களில் இப் பணம் செலுத்தப்பட வேண்டும். தவறின் உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிடுவேன்"— என்று கூறியிருக்கின்றார் (ஒ-எ)

வேலியே பயிரை மேய்கிறது!

## பொலீஸ் அதிகாரிக்கு வந்த கருங்காலி மர தளபாடங்கள்

கொழும்பு, மே 7

களவாகத் தறிக்கப்பட்ட கருங்காலி மரங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்ட தளபாடங்களை கொழும்பில் உள்ள சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவருக்கு லொறியில் ஏற்றி வந்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று தொடர்பாக ஒரு பொலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் நான்கு கான்ஸ்டபிள்களும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சட்டவிரோதச் செயலுக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியின் தொடர்புகள் பற்றி விசாரிக்கப்படுவதாக உயர்நிலைப் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தளபாடங்களுடன் அந்த லொறி கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அனுராதபுரம், கலன்பிந்துனுவெவ என்னுமிடத்தில் வைத்து பொலீஸ் கோஷ்டி ஒன்றினால் கைப்பற்றப்பட்டது.

தளபாடங்களின் பெறுமதி 8 லட்சம் ரூபாவுக்கு அதிகம் என்று சொல்லப்பட்டது. (ஒ-எ)

இந்தியாவின் பிரதமர் நரசிம்மராவுடன்

# நட்புறவு உடன்படிக்கை குறித்துப் பேசப்படவில்லை

சபையில் அமைச்சர் ஹமீத் தகவல்

கொழும்பு, மே 7

அண்மையில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது இலங்கை – இந்திய நாடுகளுக்கு இடையே நட்புறவு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடுவது பற்றிய விஷயம் இடம்பெறவில்லை என்று வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் முன்கண்டவாறு பதிலளித்தார்.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பித்த சிபார்சை நான் பிரதமர் ராவுக்குத் தெரிவித்தேன். வடக்கு-கிழக்கு இணைக்கப் படக்கூடாது என்றும் இரு மாகாணங்களுக்கும் இந்திய சமஷ்டி அமைப்பிலான அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் இக்குழு சிபாரிசு செய்துள்ளது என்று நான் அவரிடம் கூறினேன். அவர் அதனைப் பாராட்டினார்"— என்றும் அமைச்சர் கூறினார்.

குழுவின் சிபார்சை தமிழர் அரசியல் கட்சிகள் எதிர்க்கின்றன. என்றாலும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவே கொழும்பு அரசு உறுதிபூண்டிருப்பதாகவும் இந்தியப் பிரதமரிடம் தாம் தெரிவித்ததாகவும் அமைச்சர் கூறினார்.

திரு. ஜெயக்கொடியின் கேள்வி வருமாறு;

"வடக்கு - கிழக்கு இணைப்புக்கு உள்ள எதிர்ப்புப் பற்றி பிரதமர் ராவிடம் கூறினீர்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு இந்தியப் பிரதமரின் பதில் எப்படி இருந்தது என்பதை அமைச்சர் கூறுவாரா? நட்புறவு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடுவது பற்றி நீங்கள் இந்தியப் பிரதமருடன் பேசியிருந்தால், அதற்கு இந்தியப் பிரதமரின் பதில் எப்படி அமைந்தது என்பதை கூறுவீர்களா?"

## நம் நாட்டு பிரச்சினை பற்றி ராவுடன் பேச வேண்டுமா?

நாடாளுமன்றில் தமிழ் எம்.பி கேள்வி

கொழும்பு,மே 7

இந்த நாட்டின் பிரச்சினையில் எந்த வெளிநாடும் தலையிட முடியாது என்று ஜனாதிபதி கூறி வருகிறார். அப்படியெனின் இந்திய பிரதமருடன் எமது நாட்டுப் பிரச்சினை பற்றி வெளிவிவகார அமைச்சர் ஏன் பேசினார்? அதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

இவ்வாறு நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான திரு. கே. நவரத்தினம்.

இனப்பிரச்சினையில் வேறு நாடு தலையிட முடியாது என்றால், வெளியுறவு அமைச்சர் இந்திய பிரதமருடன் ஏன் இனப்பிரச்சினை பற்றிப் பேசினார்?

இனப்பிரச்சினை தீர்வுக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவையும் அமைச்சர் இந்திய பிரதமரிடம் விபரித்துள்ளார். தெரிவுக்குழுவில் யார் யார் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்பதையும் அவர் கூறினாரா? என்றும் அவர் கேட்டார். (த)

## கோழித் திருட்டு

சாவகச்சேரி, மே.7

நுணாவில் கிழக்கு சர்வசாதன சமாச சனசமூக நிலையச் சுற்றாடலில் உள்ள வீடுகளில் கடந்த சில வாரங்களாக கோழித் திருட்டு தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

இரவு வேளையில் சத்தம் சந்தடி ஏதுமின்றி திருடர்கள் கோழிகளை "பேஸ் செய்து விடுவதாக அப்பகுதி மக்கள் சலிப்படைந்துள்ளனர்.

திருடர்கள் வேலிக் கம்பிகளை அறுத்தும், கூட்டின் பூட்டை உடைத்தும் திருட்டை நடத்துகின்றனர்.

## தப்பியோடிய படையினரும் சம்பந்தம்?

கொழும்பு, ஏப்.7

மாத்தளை மாநகரசபை உறுப்பினர் ஹேரத் செய்த் கொலையின் பின்னணியில் படைகளில் இருந்து வெளியேறியவர்கள் இருப்பதாக இரகசியப் பொலீஸ் பிரிவு பணிப்பாளர் நாயகம் புஞ்சிபண்டா சேனவிரத்தின தெரிவித்துள்ளார்.

இக்கொலைச் சந்தேக நபர்கள் தொடர்பான விவரங்கள் கிடைத்துள்ளதாகவும்— அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும்— அவர் தெரிவித்தார். (த-3)

இனந்தெரியாதோர் சூடு!

## முஸ்லிம் இளைஞர் மூதூர் கடலில் பலி

மூதூர், மே 7

மூதூர் கடல் பகுதியில் வள்ளம் ஒன்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இனந்தெரியாத கோஷ்டியினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் பலியானார்.

வள்ளத்தில் இருந்த மற்றைய இருவரும் காயமின்றி தப்பிக் கொண்டனர்.

ஆட்தீன் நியாஸ் (26 வயது) என்பவரே பலியானவர் ஆவார். (ஒ-த)

## ஜப்பானின் முதலாவது எதிரி அமெரிக்காவே!

கருத்துக் கணிப்பில் வெளியான தகவல்

டோக்கியோ, மே 7

ஜப்பானின் முதலாவது எதிரியாக அமெரிக்காவே இருக்கப் போகிறது.

ஜப்பானில் உள்ள ஜிபு மற்றும் மீயி பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் இத்தகவல் வெளியாகி உள்ளது.

இவ்விரு பிரபல பல்கலைக்கழகங்களும் மத்திய ஜப்பானில் உள்ளன.

நெருக்கடிநிலை ஒன்று உலகில் ஏற்படின், இப்பொழுது அமுலில் உள்ள இரு தரப்பு பாதுகாப்பு உடன்படிக்கையை மதித்து அமெரிக்கா ஜப்பானுக்கு உதவ முன்வருவது சந்தேகம் தான் என்றும் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஒ-எ)

## போசாக்கு வாரத்தை ஒட்டி சங்கானையில் போட்டிகள்

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் ஜூன் மாதம் 2 ஆம் வாரம் கொண்டாடப்படவிருக்கும் போசாக்கு வாரத்தை முன்விட்டு பாடசாலை மட்டத்திலும் கோட்ட மட்டத்திலும் முறையே இம்மாதம் 18 ஆம் திகதியும் ,30 ஆம் திகதியும் கட்டுரை, கவிதை, பேச்சு சுவரொட்டிப் போட்டிகளும்

சனசமூக நிலையங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள் ஆகியவற்றுக்கு இடையில் நாடகம், கூத்து போட்டிகளும் நடைபெறும்.

போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று சங்கானை பிரதேச செயலர் திரு. சந்திரராசா தெரிவிக்கின்றார்

போசாக்கு வாரத்தில் பாடசாலைகளில் போசாக்குக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு இலைக்கஞ்சி அறிமுகம் செய்யப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

போசாக்கு வாரத்திறுதி விழா நன்று வெற்றி பெற்ற நடனங்கள் மேடையேற்றப்படும்; மாணவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்

# வாஷிங்டனில் கிளின்ரன் - ராவ் சந்திப்பின்போது புலிகள் விடயம் பற்றியும் பேச வேண்டுமாம்!

### சுப்பிரமணியம் சுவாமி கோரிக்கை

கொழும்பு, மே 7

அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கி வரும் உதவிகள் குறித்த விஷயமும் ஜனாதிபதி கிளின்ரன் — பிரதமர் நரசிம்மராவ் பேச்சுக்களில் இடம்பெற வேண்டும்.

ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சென்னையில் செய்தியாளர்கள் மாநாட்டில் முன்கண்டவாறு கூறினார்.

இம்மாதம் 19ஆம் திகதி வாஷிங்டனில் ஜனாதிபதி பில் கிளின்ரனுடன் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பேச்சுகள் நடத்தவிருக்கிறார் என்பது தெரிந்ததே.

இருதலைவர்களும் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலில் — இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு கலிபோர்னியாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் உதவும் விஷயமும் இடம்பெற வேண்டும் என்று டாக்டர் சுவாமி தெரிவித்தார்.

டாக்டர் சுவாமி மேலும் சொன்னதாவது:

பெனாசிருக்கு கிளின்ரன் கடிதம்

தமிழகத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்த விடுதலைப் புலிகளுக்கு உதவ வேண்டாம் என்று கோரி ஜனாதிபதி கிளின்ரன் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் புட்டோவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பாகிஸ்தான் உளவு நிறுவனம் விடுதலைப் புலிகள், காலிஸ்தான் இயக்கத்தினர், காஷ்மீர் தீவிரவாதிகள், ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள நக்ஸலைட்டுகள், அஸாம் தீவிரவாதிகள் ஆகியோருடன் தொடர்பு வைத்திருப்பதாக புதுடில்லி அரசும் வாஷிங்டன் அரசும் கூறிவருகின்றன.

லண்டன் விஜயத்தை பிரதமர் ராவ் மேற்கொண்ட போது அவரின் பாதுகாப்பை அங்கு உறுதிப்படுத்துவது குறித்து ஐரோப்பாவில் உள்ள விடுதலைப் புலிகளுடன் இந்திய உளவு நிறுவனம் "றோ" தொடர்பு கொண்டிருந்ததாக ... வெளியிட்ட விடுதலைப் புலிகளுக்கு அனுமதியளித்ததற்காக, அவ்வாறு இதழை வெளியிடும் ஆனந்த பஸார் பத்திரிகை நிறுவன அதிபர் சுவிக் சர்க்காரை தடா சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்.

அவ்வாறு இதழில் குறிப்பிட்ட கட்டுரையை வெளியாவதை உறுதிசெய்ய தமிழ்நாடு அரசின் புதுடில்லிப் பிரதிநிதி பி. குழந்தைவேலு ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் தாம் கொண்டுள்ள தொடர்பை மூடி மறைக்கும் முயற்சியாகவே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஜெயலலிதா அரசு சட்டசபையில் நிறைவேற்றியது.

விடுதலைப்புலிகளின்மீதான தடையை நீடிக்க வேண்டும் என்பது ஜெயலலிதா அரசின் உண்மையான விருப்பமாக இருப்பின், மறைந்து இருந்து பிரபாகரனைப் பிடித்து வந்து நீதிமன்றத்தில் நிறுத்த கொமாண்டோக்களை அனுப்புமாறு இந்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை ஏன் நிறைவேற்ற முடியவில்லை?

— இப்படி டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கேட்டார். (ஒ-எ)

தாய்மண் மீட்க உறுதி எடு
தமிழீழம் எங்கும் மரங்கள் நடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை

ராக்கை
முதிரை அல்லது சப்பு
உயரம் 8 அடி அல்லது 6 அடி
நீளம் 12 அடிக்கு உள்ளே.
கண்ணாடி சோக்கேஸ்
கம்பி பல்லவன் 4 X 4 முதிரை

தொடர்பு:- க. நடராசா
இல 263, மானிப்பாய் வீதி,
(வண்ணார்பண்ணை தபால் கந்தோர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

[30776]


மயிலங்காடு
## ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்
நடத்தும்

**உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 1 ஆவது சுற்று முடிவடைந்து இறுதிச் சுற்றுப் போட்டியில் 8 கழகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.**

கழகங்களின் பெயர்

1) றோயல் வி. கழகம், ஊரெழு.
2) ஆர். டீ. எஸ். வி. க., மல்லாகம்
4) சென். மேரிஸ் வி. க. நாவாந்துறை
5) உதயசூரியன் வி. க. கோண்டாவில்
4) விநாயகர் வி. க. அளவெட்டி
6) அரியாலை ஐ. வி. க.
7) சென். அன்ரனீஸ் வி. க. குருநகர்
8) யங் றோயல் வி. க. கே.கே.எஸ்.

[இ/2088]

## மரண அறிவித்தல்கள்

### தம்பிரட்ணம் சத்தியானந்தன்
### BOBBY

உடுவிலைச் சேர்ந்த தம்பிரட்ணம் சத்தியானந்தன் (முன்னைநாள் G.I. இன்டஸ்றீஸ்) 6 – 5 – 94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற J. T. தம்பிரட்ணம் (இளைப்பாறிய உப அதிபர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) திருமதி மேரி தம்பிரட்ணம் ஆகியோரின் அன்பு மகனும் சறோஜினியின் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், சென். மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை) அன்புக் கணவரும், சுமித்ரை, தம்பதி, அர்ச்சனன் (உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நித்தியானந்தன், ரட்ணமலர், பத்மஜெயன், சற்குணானந்தன், பிரேமானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற S. S. குருபாதம் (Retd. Assistant Valuer, Valuation Department) திருமதி குருபாதம் ஆகியோரின் அன்பு மருமகனும் பத்மஜெயன், வதனி, சுதன் குருபாதம், வினோ குருபாதம் (வர்த்தக வங்கி), திருமதி விஜயலக்ஷ்மி, பெரேரா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை Daniel House, உடுவிலில் இன்று (7-5-94, சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சறோஜினி சத்தியானந்தன்

''டானியல் ஹவுஸ்''
ஆர்க் லேன்,
உடுவில். (30772)

### திருமதி நாகரெட்ணம் புஷ்பதேவி
(ஓய்வுபெற்ற ஆசிரியை, சாம்பல்தீவு)

திருமதி நாகரெட்ணம் புஷ்பதேவி அவர்கள் 05 – 05 – 1994 (வியாழக்கிழமை) அன்று திருமலையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகரெட்ணம் (நில அளவையாளர்) அவர்களின் அன்பு மனைவியாரும், சரவணபவான் (2ஆம் வருடம், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), உமாதேவி 2ஆம் வருடம் பொறியியல்பீடம், பேராதனை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 07-05-1994 அன்று திருகோணமலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
நா. சரவணபவான் (மகன்)

மருத்துவபீடம்,
யாழ்ப்பாணம். (30775)

### சின்னத்துரை பரமநாதன்

ஓய்வுபெற்ற [illegible] சின்னத்துரை பரமநாதன் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கொழும்பு பம்பலப்பிட்டி இலங்கை வங்கியைச் சேர்ந்த திருமதி சயாளினி மற்றும் ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீரஞ்சன் (கனடா), ஸ்ரீ [illegible] (கனடா), திருமதி விமலினி (கனடா), ஸ்ரீ [illegible] (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கொழும்பு இலங்கை வங்கித் தலைமையகத்தைச் சேர்ந்த இராஜேந்திரா, ரஞ்சனா (கனடா), சிவமதி (கனடா), பாலகிருஷ்ண (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகர் சதாசிவம் - பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், குமாரசுவாமி திருபதி யோகம்மா - பொன்னையா, ஆசிரிய குலதுங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 400/2, நவாலி வீதி, அரியாலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியை இன்று (07 – 05 – 94) பிற்பகல் 3 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ. அருளம்பலம் (சகலன்)

(30778)

ஊழல் குற்றச்சாட்டுக்கள்:

# அ.தி.மு.க. அரசை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்க முடிவு?

சென்னை, மே 7

முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. அரசு மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க விசாரணை ஆணைக்குழு ஒன்றை மத்திய அரசு நியமிக்க விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சென்னைக்கு விஜயம் செய்த போது, மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட விருக்கும் விடயத்தை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களிடம் தெரிவித்ததாக, உள்வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'இந்தியா ருடே' தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஜெயலலிதாவின் செய்கைகள் மத்திய அரசின் பொறுமையைச் சோதித்தாலும் பிரதமர் நரசிம்மாராவ் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்க மாட்டார் என்பது மட்டும் நிச்சயம் என்றும் 'இன்டியா ருடே' மேலும் தெரிவித்திருக்கிறது.

முதலில் மாநில அரசு மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல்களை விசாரணை செய்ய கமிஷன் ஒன்றை மத்திய அரசு நியமிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

தேர்தல்களுக்கு முன்

## கிழக்கு மாகாணம் குறித்து அரசமைப்பில் மாற்றம்

### சபாநாயகர் கோருகிறார்

கொழும்பு, மே 7

ஜனாதிபதி மற்றும் நடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்பதாக கிழக்கு மாகாணம் சம்பந்தப்பட்ட அரசியல் அமைப்பில் சில மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்று ஜனாதிபதி விஜேதுங்காவிடம் கோரிக்கை விடப் பட்டது.

அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது சபாநாயகர் அல்ஹாச் எம். எச். முஹம்மது இக் கோரிக்கையை விடுத்தார்.

முஸ்லிம்களின் எதிர்காலம் தேசிய கட்சிகளிலேதான் தங்கியுள்ளது; பிராந்தியக் கட்சிகளில் அல்ல. ஆகவே முஸ்லிம்கள் சில கட்சிகளின் தவறான வழிநடத்தலுக்கு இரையாகி பின்வாங்கக் கூடாது என்று சபாநாயகர் தெரிவித்தார்.

## ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்க பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் ஜி. சீ. ஈ. [உ/த] முன்னோடிப் பரீட்சை, பண்டித, பாலபண்டித, பிரவேச பண்டித பரீட்சைகள் ஆகியவற்றை ஜூன் மாதத்தில் நடத்தவுள்ளது.

ஜி.சீ.ஈ [உ/த] முன்னோடிப் பரீட்சையில் இந்து நாகரிகம், தமிழ் ஆகியன இடம்பெறும் விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 11ஆம் திகதி ஆகும். பரீட்சை இந்துநாகரிகம் ஜூன் 3ஆம் திகதியும் தமிழ் 4ஆம் திகதியும் நடைபெறும்.

பண்டித, பாலபண்டித பிரவேச பண்டிதப் பரீட்சைகள் ஜூன் 15, 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறும்.

மேற்படி சங்கத்தின் ஆண்டும் பொதுக் கூட்டம் ஜூலை மாதத்தில் நடைபெறும் எனவும் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுகின்றார்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது.

கோப்பாய், பலாலி

## ஆசிரிய பயிற்சி கலாசாலை இணைப்புக்கு மாற்றுதிட்டம்

கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளை ஒன்றாக்கும் திட்டத்துக்கு பதிலாக மாற்றுத் திட்டம் ஒன்றை செயற்படுத்த கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிய வந்தது.

இவ்விரு கலாசாலைகளிலும் அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கை குறைவாக உள்ளமையால் இவ்விரு கலாசாலைகளையும் எவ்வாறு இயங்க வைக்கலாம் என்பது குறித்தும் —

அது தொடர்பான அவதானிப்பை தெரியப்படுத்துமாறும் — கல்வியமைச்சு யாழ். கல்வி அலுவலகத்தை முன்பு கோரியிருந்தது.

இரு கலாசாலைகளையும் ஒரே இடத்தில் இயக்கவும் — பிறிதொரு இடத்தில் கல்விக் கல்லூரி மற்றும் தொலைக் கல்வி பயிற்சிகளை ஆரம்பிக்க முடியுமா என்பது தொடர்பாகவும் கல்வியமைச்சு ஆராய்வதாகவும் கல்வியமைச்சு பிரதி செயலாளர் திரு ஸ்ரானிலி விஜயசிங்க தெரிவித்துள்ளார். (த-3)

சரியான சொல் இருக்க

## பிரெஞ்சுக்கு பதிலாக ஆங்கிலம் பாவித்தால் 3,500 டொலர் அபராதம்!

பாரிஸ், மே 7

பிரெஞ்சு மொழிக்கு அந்நாட்டு நடவடிக்கைகளில் முக்கியத்துவம் வழங்கும் சட்டமூலம் ஒன்றை பிரெஞ்சு நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

பிரெஞ்சு மொழியில் சரியான வார்த்தை ஒன்று இருக்கும் போது அதனைப் பயன்படுத்தாது அதற்குப் பதிலாக ஆங்கிலத்தை பகிரங்கமாக பாவிப்பவர்களுக்கு அபராதம் விதிக்க இச்சட்டமூலம் இடமளிக்கின்றது.

அபராதமாக 3 ஆயிரத்து 500 டொலர் விதிக்கப்படும்.

இச்சட்டமூலம் செனட் சபையின் அங்கீகாரம் பெற்ற பின்னரே அமுலுக்கு வரும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-எ)

## விளையாட்டு நிகழ்வுகள்

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் டொனால்ட் கணேஷ் குமார் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடக்கும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ ஓல்ட் கோல்ட் வி. க. அணி எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி

(இ-3)

★ ★ ★

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நடத்தி வரும் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:

கிரிக்கெட்

★ காலை 9 மணி — பிரசாந்த் வி. க. அணி எதிர் கண்டுக்குழி பாரதி வி. க. அணி.

★ பி.ப 3 மணி:- அடைக்கல அன்னை வி. க. 'ஏ' அணி எதிர் கோப்பாய் நாவடி வி. க. அணி

கரப்பந்தாட்டம் [illegible]
பி. ப. 3 மணி [illegible]

★ சிவன் வி.க. அணி எதிர் யூனியன் வி. க. அணி.

[இ-3]

★ ★ ★

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ ஊரெழு றோயல் வி. க. அணி எதிர் கோண்டாவில் உதயசூரியன் வி. க. அணி.

★ அளவெட்டி விநாயகர் வி. க. அணி எதிர் காங்கேசன்துறை யங்றோயல்.

(இ-89)

★ ★ ★

யாழ். ஆஸ்பத்திரி கிரிக்கெட் அணிக்கும் அச்சுவேலி றஜீவன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளை காலை 9 மணிக்கு — அச்சுவேலி றஜீவன் வி. க. [illegible]

(இ-15)

## நரோமா பயணிகள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மே 7

'நரோமா' கப்பலில் எதிர்வரும் 10 ஆம் திகதி செல்ல செயலகத்தில் பதிவு செய்தவர்களை அன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் பருத்தித்துறையில் சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

அதையடுத்து ஜூன் 7 ஆம், 21 ஆம் திகதிகளிலேயே 'நரோமா' கப்பல் சேவை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3 162)

## பதவி உயர்வுப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 7

அரசாங்க மற்றும் மாகாண சேவையின் பண்டசாலைக் காப்பாளர் சேவை II -''அ'' வகுப்புக்கான பதவி உயர்வுப் பரீட்சை ஜூன் மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் இம்மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அரசாங்க மற்றும் மாகாண சேவையில் எழுதுநர் சேவையில் II ''அ'' பிரிவுக்கான பதவி உயர்வுப் பரீட்சை ஜூன் மாதம் 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது. பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் இம்மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

மேற்கூறிய இரண்டு பரீட்சைகள் பற்றிய விபரங்கள் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியாகி உள்ளன.

குறிப்பிட்ட வர்த்தமானியை, யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். (அ)

## தி. மு. க. வுக்கு பண்ருட்டி ஆதரவு

தமிழ்நாடு, மயிலாப்பூர் சட்டசபைத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் தி மு க வேட்பாளரை பண்ருட்டி இராமச்சந்திரன் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி ஆதரிக்கும்.

கட்சியின் தலைவரான திரு. இராமச்சந்திரன் நேற்று இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பெருந்துறை சட்டசபைத் தொகுதி இடைத் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளரை தமது கட்சி ஆதரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## ஆலயங்களில்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை நண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இரதோற்சவம் எதிர்வரும் 23திகதியும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (த-100)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய கொடியேற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 11மணிக்கு ஆரம்பமாகிறது. தேர்த் திருவிழா 23 ஆம் திகதி காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 24 ஆம் திகதி காலையிலும் இடம்பெறும். (த-30)

## நூல் அறிமுக விழா

அன்புமணியின் ''இல்லத்தரசி'' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் [illegible] பணிமனையில் நடைபெறும்.

## இன்று நடப்பவை

சுன்னாகம் லயன்ஸ் கழகம் நடத்தும் இடம்பெயர்ந்த இளைஞர்களுக்கான விவசாயப்பயிற்சிநெறியின் விசேட அமர்வு இன்று சனிக்கிழமை காலை 9மணி முதல் மானிப்பாய் வீதியிலுள்ள உரும்பிராய் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் திரு த. குகதாசன் தலைமையில் நடைபெறும் இவ்விசேட அமர்வின் சர்வதேச லயன்ஸ் கழக 306(பி) மாவட்ட பிராந்தியத் தலைவர் திரு. எஸ். இராமலிங்கன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார்.

★ ★ ★

டாக்டர் க. சிவனடியான் எழுதிய ''என் கையெல்லாம் இரத்தம்'' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. அ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். (த-163)

★ ★ ★

கச்சாய் கொடிகாமம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட யுவதிகளினால் தயாரிக்கப்பட்ட தையல் பொருள்களின் கண்காட்சி இன்று சனி காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்படும். (த-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 7

யாழ். பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் ''பொது வாழ்வில் எந்திரப் பொறியியல்'' அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 111 இன் ஆரம்ப விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பொறியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் வைபவத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆரம்ப வுரையையும், பொறியியலாளர் திரு சந்திரசேன் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர். (இ-3)

★ ★ ★

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு. சு. செல்வத்துரை தலைமையில் நடைபெறும். (க)

## இசையாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பம் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், மே 7

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் வாய்ப்பாட்டு இசையாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் கர்நாடக இசையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களும் அரசாங்க இசை நடனக் கல்லூரியில் கர்நாடக இசையில் இறுதிச் சான்றிதழ் பெற்றவர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 18 முதல் 40 வரையாகும்.

விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கல்வி, கலாசார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

இது சம்பந்தமான விபரங்கள் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் வெளியாகி உள்ளன.

வர்த்தமானியின் பிரதியை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். [அ]

மட்டக்களப்பு....
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிராமங்கள் அதிரடிப்பொலீஸ் படையினரின் பாரிய சுற்றிவளைப்புக்கு இலக்காகின.

உப்பூரல், சின்னவெளி இலங்கை முகத்துவாரம் ஆகிய பகுதிகளே சுற்றி வளைக்கப்பட்டன. ஈச்சிலம்பற்றை, வெருகல், முகத்துவாரம் பட்டியடி ஆகிய முகாம்களில் இருந்து பெருமளவிலான அதிரடிப் படையினர் இச்சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது நான்கு தமிழரை படையினர் பலமாக தாக்கி சித்திரவதை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [அ-எ]


வெள்ளி விழா ஆண்டில்..
1969 ஆம் ஆண்டு முதல் தன்னிகரற்ற சேவையில்

## பொண்ட் (BOND) கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS & EVENING CLASS
02 - 05 - 1994 முதல்

| | | |
|---|---|---|
| கணிதம் | விஞ்ஞானம் | தமிழ் |
| சமூகக்கல்வி | ஆங்கிலம் | சமயம் |
| வர்த்தகம் | விவசாயம் | மனைப்பொருளியல் |
| சித்திரம் | சங்கீதம் | நடனம் |

ஆகிய பாடங்களுக்கான
மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடனான வகுப்புகள்
[7368]

## விற்பனைக்கு

மரவள்ளித்தடி விற்பனைக்கு உண்டு
(பார்வையிட விரும்பின் காலை 8 மணிக்குமுன் வரவும்)

க. பாலசிங்கம்,
351, கோயில் வீதி, நல்லூர்.
(கப்பன் கழகம் முன்பாக)
(சி/8079)

வெள்ளி விழா ஆண்டில்....
## பொண்ட் (BOND) கல்வி நிறுவனம்
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு 5 (புலமைப் பரிசில்) பரீட்சைக்கான விசேட மீட்டல்

தமிழ் ]– திரு. திருஞானம், செல்வி ஜோன்சன்
கணிதம் ]– திரு. கனகசுந்தரம், திரு. அருள்ராஜ், திரு. சிவநாதன்

ஆகிய ஆசிரியர்களது ஒருமித்த கற்பித்தலும், ஒவ்வொரு ஞாயிறும பயிற்சிப் பரீட்சைகளுடனுமான வகுப்புகள்

ஆரம்பம்: 07 – 05 – 1994
[7369]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 393/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org